பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**09 07 2026** **6 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆஸ்திரேலியா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று அந்நாட்டுப் பிரதமர் திரு. ஆண்டனி அல்பனீஸ் உடன் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

2. தமிழக விவசாயிகளிடமிருந்து கொப்பரை மற்றும் தோட்டாபுரி மாம்பழங்களை கொள்முதல் செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

3. தமிழகத்தில் புதிதாக 6 அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

4. மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களின் சில பகுதிகளில் இன்று மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. 23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்திய வீராங்கனைகள் 9 பேர் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஆஸ்திரேலியா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டுப் பிரதமர் திரு. ஆண்டனி அல்பனீஸ் உடன் மெல்போர்னில் இன்று இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

அப்போது இரு நாடுகளுக்கிடையே வர்த்தகம், பாதுகாப்பு, முக்கிய தொழில்நுட்பங்கள், கல்வி, இருநாட்டு மக்களுக்கு இடையேயான உறவுகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விவாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் மூன்று நாள் பயணம் மேற்கொள்ளும் பிரதமர், அங்கு நடைபெறும் இந்தியா-ஆஸ்திரேலியா வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளார்.

இரு நாட்டு முன்னணி வர்த்தக தலைவர்களுடன் அவர் உரையாட உள்ளார்.

அத்துடன் தலைமைச் செயல் அதிகாரிகள் கூட்டத்தில் பிரதமர் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. நரேந்திர மோடி, ஆஸ்திரேலியா பிரதமருடனான சந்திப்பை தாம் ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக கூறியுள்ளார்.

அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினருடன் தாம் உரையாட வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மெல்போர்னில் தமக்கு சிறப்பான வரவேற்பளித்த இந்திய வம்சாவளியினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழக விவசாயிகளிடமிருந்து கொப்பரை மற்றும் தோட்டாபுரி மாம்பழங்களை கொள்முதல் செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக அரசு சமர்ப்பித்த பரிந்துரையின் அடிப்படையில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கு சிறந்த விலை கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சந்தையின் ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் நெருக்கடியில் இருந்தும் விவசாயிகளை பாதுகாக்கும் என்று கூறியுள்ளது.

இதையடுத்து தமிழகத்தில் 87 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் மேற்பட்ட கொப்பரை கொள்முதல் செய்யப்படும்.

இது குறைந்தபட்ச ஆதரவு விலை அடிப்படையில் ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

அத்துடன் 96 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான தோட்டாபுரி மாம்பழங்களை கொள்முதல் செய்வதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச ஆதரவு விலையின்கீழ் இது கொள்முதல் செய்யப்படும் என்றும், குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் சந்தை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கை விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சிறந்த வருவாயை உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வேளாண் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் 6 தனியார் மருத்துவக் கல்லூரிகள் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாக மாற்றப்படுவதால் அதற்கு இணையாக 6 அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சில தனியார் மருத்துவக் கல்லூரிகள் நிகர்நிலை பல்கலைக்கழகங்களாக தரம் உயர்த்தப்படுவதால் 700 அரசு ஒதுக்கீட்டு இளநிலை மருத்துவ படிப்புக்கான இடங்கள் பறிபோவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவற்றுக்கான மாணவர் சேர்க்கை அதிகாரம் மத்திய அரசுக்கு மாற்றப்பட்டுவிடும் என்று கூறியுள்ளார்.

இதன் மூலம் அப்பல்கலைக்கழகங்களில் அரசு ஒதுக்கீட்டில் சேருவதற்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 16 அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா 50 இடங்களை கூடுதலாக அதிகரிக்க வேண்டும் என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

மகளிரை பொருளாதார தன்னிறைவு பெற்றவர்களாக மாற்றும் வகையில் ஊரக சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ், மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

சேலம் மாவட்டம் கொண்டலாம்பட்டியில் இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் சார்பில் மகளிருக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Vijayakumar Interaction — 58 Sec)**

<<<<>>>>

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் இன்று பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரானுக்கு எதிரான அமெரிக்க ராணுவ நடவடிக்கையில் பல்வேறு முக்கிய நேட்டோ கூட்டமைப்பு நாடுகள் ஆதரவளிக்க மறுத்துவிட்டதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

-------------

மேற்காசியாவில் நிலவும் பதற்றங்கள், அண்மையில் நடைபெற்ற தாக்குதல்கள் கவலையளிப்பதாக இந்தியா கூறியுள்ளது.

-------------

இந்தியா-மியான்மர் இடையே இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

-------------

விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் நடவடிக்கைளை தொடங்குமாறு புகையிலை நிறுவனங்களுக்கு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அறிவுறுத்தியுள்ளார்.

-------------

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊரக வளர்ச்சித் திட்டங்கள், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து அமைச்சர் திரு. ஆனந்த் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே பரமேஸ்வரமங்கலத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் அமைச்சர் திரு. காந்திராஜ், 304 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே ரயிலில் கடத்திவரப்பட்ட 5 கிலோ போதைப்பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்து 2 பேரை கைது செய்தனர்.

-------------

சேலம் மாவட்டம் எடப்பாடி அருகே பல்வேறு குற்றவாளிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 694 கிலோ போதைப்பொருள் பொருட்கள் தீயிட்டு அழிக்கப்பட்டது.

-------------

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் **84** பேருக்கு **7** லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி துர்காமூர்த்தி வழங்கினார்.

-------------

தேனி அருகே பழனிசெட்டிப் பகுதியில் தடை செய்யப்பட்ட **220** கிலோ புகையிலைப் பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்து **3** பேரை கைது செய்தனர்.

-------------

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே மீனாட்சி சுந்தரேசர் திருக்கோவலில் திருக்கல்யாணம் நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

**23** வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் **9** வீராங்கனைகள் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இந்தோனேஷியாவின் ஜகார்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதிச் சுற்றில் 51 கிலோ எடைப்பிரிவில் தனு, 54 கிலோ எடைப்பிரிவில் நிஷா, 57 கிலோ எடைப்பிரிவில் Prachi, 60 கிலோ எடைப்பிரிவில் நிகிதா சந்த், 65 கிலோ எடைப்பிரிவில் காஜல், 70 கிலோ எடைப்பிரிவில் ஷிவானி, 75 கிலோ எடைப்பிரிவில் முஸ்கான், 80 கிலோ எடைப்பிரிவில் Naina, Priyanka ஆகியோர் வெற்றி பெற்றனர்.

இதன்மூலம் இந்தியாவுக்கு 9 பதக்கங்கள் கிடைப்பது உறுதியாகியுள்ளது.

---------------

ஆஸ்திரியா அணிக்கு எதிரான 21 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது மற்றும் இறுதி ஹாக்கிப் போட்டியில் இந்தியா 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

-------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 4வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

**Bristol-ல்** நடைபெற உள்ள இப்போட்டி இரவு **10** மணிக்கு தொடங்குகிறது.

**5** போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து **2-1** ஆட்டக் கணக்கில் முன்னிலையில் உள்ளது.

--------------

பெல்ஜியத்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**